DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai.
DVC. No. 2 of 2024
Prosecution witness : PW -1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி கீதா | Caste | : | |
| Husband Name | : | திரு. ரமேஷ் | Calling | : | |
| Village | : | திருகண்டலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 46 |

(Accused called present)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.12.2024.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி நேரம் 2.30

1. எனது சகோதரர்களுக்கு வீடு கட்ட மற்றும் மற்ற தேவைகளுக்கு பண உதவி செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகின்றேன் என்றாலும், நான் திருகண்டலம் கிராமத்தில் தெரிந்த நபர்களிடம் பணம் வாங்கி கொடுத்துள்ளேன் என்றால் இல்லை.

2. நான் கடன் வாங்கி கொடுத்ததால் தான் அந்த கடன்காரர்கள் எதிர்மனுதாரரை பார்த்து கேட்டதால், எதிர்மனுதாரர் என்னிடம் வந்து கேட்டதன் காரணமாக தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் இல்லை.

3. என்னுடைய மனுவில் பெரியபாளையம் கிரகபிரவேச நகரில் எதிர்மனுதாராருக்கு சொந்தமாக வீடு இருப்பதாக கூறியுள்ளது தவறு அவ்வாறு இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் தற்போது வசித்து வரும் வீடு தரைதளம் மற்றும் முதல் மாடியில் அறைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வீட்டில் நானும் எனது மகனும் தற்போது வசித்து வருகின்றோம் என்றால் சரிதான். மேற்படி அந்த வீடு எதிர்மனுதாரர்க்கு சொந்தமான வீடு என்றால் சரிதான்.

5. நாங்கள் தற்போது வசித்து வரும் வீட்டில் எதிர்மனுதாரர் வரக்கூடாது என்று அவருடைய துணிகளை எல்லாம் எடுத்து வெளியே எரிந்துவிட்டோம் என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு எங்கள் மகள், அவரது தந்தையான எதிர்மனுதாரருடன் பேசுவதால் அவரையும் வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டேன்

என்றால் இல்லை. எனது மகள் அவரது தந்தையுடன் போவதாக கூறியதன் அடிப்படையில் அவருடன் சென்றார்.

7. நான் அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பிய பின்பு என்னுடன் வசிப்பதற்கு வந்தார் அதை நான் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல.

8. எதிர்மனுதாரர் என்னுடைய பெயரில் திருகண்டலம் கிராமத்தில் 09.05.2014ம்தேதி அன்று 28 சென்ட் நிலம் வாங்கி பதிவு செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

9. மேற்படி நிலம் இன்றைய தேதிவரையிலும் எனது கையில் தான் இருந்து வருகின்றது என்று சொன்னால் சரிதான். ஆனால் அதை எதிர்மனுதாரர் தான் அனுபவம் செய்து வருகின்றார்.

10. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றாலும், மேற்படி இடத்ததை நான் துரைமுதலியார் என்வபருக்கு குத்தகைக்கு விட்டு அதில் வரும் பணத்தை நான் தான் பெற்று வருகின்றேன் என்றால் அதை நிரூபணம் செய்யுங்கள்.

11. எதிர்மனுதாரர் கடந்த 10.08.2020ல் சோழவரம் ஊரில் இரண்டே முக்கால் சென்ட் நிலம் எனது பெயரிலும் எதிர்மனுதாரர் பெயரிலும் வாங்கி வைத்துள்ளார் என்றால் மொத்தம் ஆறு சென்ட் நிலம் எனது பெயரிலும் எதிர்மனுதாரர் பெயரிலும் வாங்கி வைத்துள்ளார்.

12. 30.12.2020ம் தேதி அன்று எதிர்மனுதாரர் அவருடைய மகன் ஆதவன் பெயரில் ஆறு சென்ட் நிலம் திருகண்டலத்தில் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படிகிரையம் எழுதிய சமயத்தில் எனது மகன் இளவர் என்பதால் அதற்கு காப்பாளராக என்னை தான் நியமனம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

13. திருகண்டலத்தில் உள்ள நிலம், சோழவரத்தில் உள்ள மனை அவற்றில் நிறுத்தப்படும் வாகன கட்டணம் என்னால் பெறப்பட்டு வருகின்றது என்றால் இல்லை.

14. எனது மகன் ஆதவன் என்பவருக்கு பல்சர் வாகனத்தை வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு இன்றைய தேதி வரையிலும் எதிர்மனுதாரர் மாத தவனை தொகை செலுத்தி வருகின்றார் என்றால் மேற்படி கடன் முடிவடைந்தது நானும் அந்த வாகனம் வாங்க 30 ஆயிரம் பணம் கொடுத்துள்ளேன்.

15. நான் பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் இன்றைய தேதி வரையிலும் மாதம் 4, 747 ரூபாய் பணம் செலுத்தி வருகின்றார் என்றால் வாகனத்தின் மொத்த டீவ் 24 மாதம் தான். எனது மகன் மூன்று ஆண்டு கல்லுரி படிப்பை முடித்துவிட்டார். அதனால் அவர் கடன் தொகை செலுத்த வாய்ப்பு இல்லை.

16. எனக்கு திருமணம் ஆன பின்பு குடும்பத்திற்காக மொத்தம் 47சவரன் வாங்கி கொடுத்துள்ளார் என்றால் உண்மை தான் எனது கையில் இல்லை.

17. எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டு அதற்கான மருத்துவ செலவுகள் எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் 7 லட்சம் செலவு ஆகவில்லை 2 லட்சத்தி 50ஆயிரம் மட்டுமே செலவு செய்தார்.

18. எனது தாய் வீட்டில் இருந்து எனக்கு 7 1/4 சென்ட் நிலம் கொடுத்துள்ளார்கள் ள்ன்றாலும் அதனுடைய மதிப்பு தற்போது 46லட்சம் என்றால் கொடுக்கவில்லை.மேற்படி சொத்து கொடுத்தற்கான ஆவணத்தை காட்டவும்.

19. எனது தாய் வீட்டிற்கு சொந்தமான நிலம் கிருஷ்ணபுரம் கண்டிகையில் இருந்தது என்றாலும், மேற்படி நிலம் நானும் எனது சகோதரர்களும் சேர்ந்து விற்பனை செய்து அதில் எனக்கு பங்கு தொகையான சுமார் 22 லட்சம் வந்துள்ளது என்றாலும், கன்னிகைப்பேர் இந்தியன் வங்கியில் மேற்படி தொகை சேமிப்பு கணக்கில் உள்ளது என்றால் இல்லை.

20. மேற்படி வங்கி கணக்கில் இருந்து தொகை எடுத்து வட்டி வியாபாரம் செய்து வருகின்றேன் என்றால் இல்லை.

21. எனக்கு சொந்தமாக ஹேண்டாய் நான்கு சக்கர வாகனம் உள்ளது என்றால் இல்லை.

22. நான் பாதுகாப்பு அலுவலர் மூலமாக தாக்கல் செய்துள்ள மனுவில் 20 லட்சம் ரூபாய் இழப்பீடு கேட்டுள்ளேன் என்றாலும், மேற்படி இழப்பீடு என்ன காரணத்திற்காக கேட்கிறீர்கள் என்று ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் என் குடும்ப நலத்திற்காக எனது குழந்தைகளின் நலத்திற்காகவும் நான் இழப்பீடு கோருகின்றேன்.

23. நான் சமூக நலத்துறை அலுவலரிடம் அளிக்கப்பட்ட மனுவில் மாதந்திர பாரமரிப்பு தொகையாக மாதம் எவ்வளவு தொகை கோரியுள்ளேன் என்றால் ரூபாய் 20ஆயிரம்.

24. மேற்படி தொகை எதற்காக கோரப்படுகின்றது என்று குறிபிட்டு என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். மருத்துவ செலவு, போக்குவரத்து செலவுகள், மளிகை செலவு. மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளேன்.

25. நிருபணவாக்குமூலத்தில் எந்த தேதியில் தாக்கினார் என்பது குறித்த விவரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர் என்னை மனரீதியகாவும், உடல் ரீதியகாவும் கொடுமை செய்தார்.

26. நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகின்றேன் என்றாலும் நான் தான் எதிர்மனுதாரரை கொடுமை செய்தேன் என்றால் இல்லை.

27. எனது தரப்பில் தாக்கல் செய்த ம.சா. ஆ 1 ஆவணமான சமூதாய பணிபதிவேட்டில் குறிப்பிடபட்டுள்ள வழக்கை விசாரணை செய்து உண்மை தன்மை இல்லை என்று முடித்துவைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

28. எனது தரப்பில் தாக்கல் செய்த ம.சா. ஆ 2 ஆவணத்தில் பத்திர எழுத்தர் எழுத்துப்பிழை உள்ளது என்பதால் அதற்கு மாற்று ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது அந்த பிழைத்திருத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் எனது கையில் கொடுக்கவில்லை அதனால் நான் முன்னிலை செய்யவில்லை.

29. எனது தரப்பில் தாக்கல் செய்த ம.சா. ஆ 4 ஆவணத்தில் நான் கொடுத்த புகாரில் உண்மை தன்மை இல்லை என்று முடித்துவைத்துவிட்டார்கள் என்றால் கட்டபஞ்சாயத்து மாதிரி பேசி முடித்துவைத்தார்கள்.

30. எதிர்மனுதாரர் அவர் சம்பாதித்த அனைத்து சொத்துக்களையும் சம்பாதித்த தொகை முழுவதும் அசையாச் சொத்தாக வாங்கி எங்களிடம் ஒப்படைத்து விட்டு எங்களால் வெளியேற்றபட்டார் என்றால் இல்லை.

31. எதிர்மனுதாரர் வாங்கும் குறைந்த சம்பளத்தினை கொண்டு எனது மகள் வான்முகில் என்பவரை படித்து வைத்து வருகின்றார் என்றால் சரிதான்.

32. எதிர்மனுதாரரை விட அதிகமாக வசதி வாய்ப்பு கொண்டுள்ளதால் எதிர்மனுதாரரிடம் பண உதவி எனக்கு தேவைப்படாது என்றால் எனக்கு வருமானம் இல்லை அதனால் தான் நீதிமன்றம் நாடி வந்தேன்.

33. நான் எதிர்மனுதாரர்க்கு எதிராக பல பொய்யான சங்திகளை கொண்டு இந்த மனுவினையும் சமூக நல பாதுகாப்பு மனுவிலும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

34. நான் எதிர்மனுதாரர்க்கு எதிராக பல பொய்யான சங்திகளை கொண்டு இந்த மனுவினையும், சமூக நல பாதுகாப்பு மனுவிலும் கூறியுள்ளேன் என்பதால் இந்த புகாரினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.